தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 337/ந/2023
நாள் 16.11.2023

திருமதி. A.S. இந்திரா,
குன்றத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
குன்றத்தூர் நகராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, கதவு எண்.954 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. A.S. இந்திரா என்பவரின் 26.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.10.2023 அன்று பெறப்பட்டு 337/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, கதவு எண்.954 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. A.S. இந்திரா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"காஞ்சிபுரம் மாவட்டம், நெ.8, மகாவீர் அவென்யு, சம்பந்தம் நகர், குன்றத்தூர் என்ற முகவரியில் சொந்த வீட்டில் வசித்து வரும் திரு.P.வினோத்குமார் என்பவர் குன்றத்தூர் மெட்ரோ கிராண்ட் சிட்டி F.No.111 என்ற முகவரியில் வாடகைக்கு விடுவதற்காக கடைகளும், அடுக்குமாடி வீடுகளும் கட்டிவருகிறார்.

1. மெட்ரோ கிராண்ட் சிட்டி F.No.111 கட்டடமானது குன்றத்தூர் நகராட்சியில் வழங்கப்பட்ட கட்டட அனுமதிபடி கட்டப்படவில்லை.

2. நான்கு சக்கர மற்றும் இரண்டு சக்கர வாகன நிறுத்துமிடம் இல்லை. கடைக்கு வருபவரும், வீடு வாடகைக்கு வருவோரும் சுப நிகழ்ச்சிகள் நடந்தால் எங்கு வாகனத்தை நிறுத்துவார்கள்.

3. ரோட்டின் வளைவு திரும்பும் இடத்தில் 7–அடி விடாமல் கட்டுகிறார்.

4. அரசாங்கத்துக்கு சொந்தமான, சுமார் 50–அடி நீளமும் 1–அடி அகலமும் கொண்ட சுற்றுச்சுவரை இடித்து அதன் மேல் கட்டடம் கட்டுகிறார்கள். இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

5. பழைய விவசாய கிணற்றின்மேல் கட்டடம் கட்டினாலும் அதற்கு சரியான காலம் குழி போடவில்லை.

6. நீரோட்டப்பகுதி என்று தெரிந்தும் மண் பரிசோதனை செய்யவில்லை.

7. பக்கவாட்டில் போதுமான இடைவெளியும் விடவில்லை.

8. கட்டடம் கட்டும் பொழுது கட்டடத்தை சுற்றி தடுப்பு மறைவை ஏற்படுத்தப்படவில்லை.

9. இன்டர்நெட் ஒயர் மற்றும் கேபிள் ஒயர்களின்மீதும், மின்சார ஒயர் மீதும் அடிக்கடி பலகைகள் விழுந்து ஒயர்கள் அறுந்து சரி செய்யப்பட்டுள்ளது. எனவே கட்டட அனுமதி மற்றும் வரைபடம் தொடர்பான ஆவணங்களை ஆராய்வதுடன், இதுகுறித்து பலமுறை மனுக்கள் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நகராட்சி அலுவலர்கள் மீதும், கட்டடத்தின் உரிமையாளர் மீதும் தக்க நடவடிக்கை எடுத்திடவும், இம்முறைமன்றத்தை வேண்டுகின்றேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் குன்றத்தூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. குன்றத்தூர் நகராட்சி ஆணையர் அறிக்கை ஏதும் சமர்ப்பிக்கவில்லை.

(3) மனுதாரரும் மற்றும் குன்றத்தூர் நகராட்சி ஆணையரும் 07.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி. A.S. இந்திரா என்பவர் 07.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''எனது வீட்டின் பக்கத்து வீடான குன்றத்தூர், மெட்ரோ கிராண்ட் சிட்டி லோட்டஸ், தெரு, பிளாட் எண் 111–ல் வசிக்கும் திரு.P.வினோத்குமார் என்பவர் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றை கட்டி வருகிறார். வீடு மற்றும் கடைகளுடன் கூடிய மேற்கண்ட அடுக்குமாடி கட்டடம் கட்டட விதிமுறைகளை மீறி கட்டப்பட்டு வருகிறது. விதிகளின்படி அவரது வீட்டின் அனைத்து பக்கங்களிலும் Setback போன்ற இடங்கள் விடப்படவில்லை. மேலும் கட்டுமானத்தின்போது கட்டடத்தின் முகப்பில் எவ்வித மூடுதிரையோ, தார்பாய் கொண்டோ மூடாமலும், பாதுகாப்பு அற்ற நிலையிலும் கட்டட வேலை நடைபெற்று வருவதால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் எனது வீட்டின் மேல்கூரையும் பாதிக்கப்பட்டுள்ளது. ரோடு வளைவு திரும்பும் இடத்தில் 7 அடி விடாமல் கட்டுகிறார். இது தொடர்பாக எங்களது வார்டு உறுப்பினரிடம் புகார் அனுப்பியும் எவ்வித பதிலும் பெறப்படவில்லை.

எனவே விதிகளை மீறி அடுக்குமாடி வீடு கட்டப்பட்டு வருவதை தடுத்திடவும், மேற்கண்ட கட்டடக் கழிவுகள் எங்கள் வீடுகளின் மீது விழாமல் தடுத்திடவும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான குன்றத்தூர் நகராட்சி ஆணையருக்கு பதிலாக நகரமைப்பு ஆய்வாளராகப் பணியாற்றும் திரு. G.K. பாலசுப்ரமணியம் என்பவர் 07.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''மனுதாரரின் புகார் மனுவையொட்டி காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், மெட்ரோ கிராண்ட் சிட்டி லோட்டஸ், தெரு, பிளாட் எண் 111–ல் கட்டப்பட்டு வரும் கட்டடம் நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டடம் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட கட்டடத்திற்கு Stop Work Notice- ம் அதனைத் தொடர்ந்து விதிகளின்படி மற்ற தாக்கீதுகளும் குன்றத்தூர் நகராட்சியால் வழங்கிடவும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், குன்றத்தூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரை சார்ந்த மனுதாரர் திருமதி. A.S. இந்திரா என்பவர் தனது 26.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட பிளாட் எண்.111, குன்றத்தூர் மெட்ரோ கிராண்ட் சிட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு.P.வினோத்குமார் என்பவர் கடைகளும், குடியிருப்பு வீடுகளும் வாடகைக்கு விடும் நோக்கத்தில் நகராட்சி அனுமதியின்றி, போதிய இடைவெளியின்றி அடுக்குமாடி கட்டடம் கட்டி வருவதாகவும் இக்கட்டடத்தை கட்டும்போது எவ்வித பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால் கட்டட கழிவுகள் தனது வீட்டில் விழுந்து சேதம் ஏற்படுவதாகவும், வாகனங்கள் நிறுத்துமிடம் இன்றியும் விதிமீறி கட்டடம் கட்டி வருவதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் மனுதாரரின் புகார் மனு குறித்து, குன்றத்தூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெருவில் பிளாட் எண்.111–ல் கட்டப்பட்டு வரும் கட்டடம் கள ஆய்வு செய்யப்பட்டத்தில், மேற்படி கட்டடமானது நகராட்சி அனுமதியின்றி விதிமீறி கட்டப்பட்டு வருவதால் Stop work notice அளித்து அதனைத் தொடர்ந்து விதிகளின்படி குன்றத்தூர் நகராட்சியால் உரிய தாக்கீதுகள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் தனது வாக்குமூலம் வாயிலாக தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டடத்தை, நகராட்சியின் அனுமதியின்றி கட்டட உரிமையாளர் கட்ட ஆரம்பித்த நிலையிலேயே நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையாளர் கள ஆய்வு செய்யாமல் மெத்தனமாகவும், அலட்சியமாகவும் இருந்து, மனுதாரரால் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளிக்கப்பட்டதும் அவசர அவசரமாக கள ஆய்வு செய்து மேற்படி கட்டடம் விதிமீறி நகராட்சி கட்டட அனுமதியின்றி கட்டி வருவதாக தெரிவிப்பதன் மூலம் நகராட்சி ஆணையாளர் உட்பட நகராட்சி நிர்வாகத்தினர் உள்நோக்கத்துடனும், பொறுப்பற்ற முறையிலும் நடந்து கொண்டுள்ளது தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது.

மேலும், மனுதாரரின் புகார் மனு குறித்து, குன்றத்தூர் நகராட்சி ஆணையாளர் தனது விளக்க அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்காமல், அலட்சியத்துடன் செயல்பட்டுள்ளார். நகராட்சி ஆணையாளரின் இத்தகைய நடவடிக்கையை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

குன்றத்தூர் நகராட்சியின் அனுமதியின்றி அடுக்குமாடி கட்டட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.07, நாள் 10.01.2023–ல் வெளியிடப்பட்டுள்ள 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், பிரிவு 56, 57 மற்றும் 80 (A)–ன் கீழ் அனுமதியற்ற அபிவிருத்திகள் மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வழிமுறைப்படுத்துதலுக்கான விதிகளை பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதன்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைத்திடுமாறு குன்றத்தூர் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

நகராட்சி அனுமதியின்றி கட்டட உரிமையாளரால் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் அடுக்குமாடி கட்டடத்தை, கட்டுமானப் பணி மேற்கொள்ளும்போதே நகராட்சி நிர்வாகத்தினர் களஆய்வு மேற்கொள்ளாமல், மெத்தனப் போக்குடனும், பணியில் அலட்சியமாகவும் நடந்து கொண்டுள்ளதால் சம்பந்தப்பட்ட குன்றத்தூர் நகராட்சி ஆணையாளர், பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இதில் எவ்வித சுணக்கமோ தாமதமோ இருக்கக்கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் நகராட்சி அனுமதியின்றி கட்டப்படும் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளால், மனுதாரரின் குடியிருப்புக்கு கட்டட கழிவுகள் மூலம் எவ்வித சேதமும் விளைவிக்காமல் இருப்பதை உறுதி செய்திடுமாறு நகராட்சி ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. A.S. இந்திரா,
எண்.954, லோட்டஸ் தெரு,
மேட்ரோ கிரண்ட் சிட்டி, குன்றத்தூர்,
சென்னை 600 069.

2) ஆணையாளர், குன்றத்தூர் நகராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
17/11/23